## அக்னிவீர் வாயு தேர்வுக்கு பிப்ரவரி 6– ஆம் தேதிக்குள் விண்ணப்பிக்கலாம்

திருப்பூர், ஜன.29: இந்திய ராணுவத்தால் நடத்தப்படும் அக்னி வீர் வாயு தேர்வுக்கு பிப்ரவரி 6–ஆம் தேதிக்குள் இணையவழியாக விண்ணப்பிக்கலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து திருப்பூர் மாவட்ட ஆட்சியர் தா.கிறிஸ்துராஜ் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு:

இந்திய ராணுவத்தால் அக்னி வீர் வாயு தேர்வானது மார்ச் 17–ஆம் தேதி இணையவழியில் நடைபெறவுள்ளது. இந்தத் தேர்வில் பங்கேற்க பிப்ரவரி 6–ஆம் தேதிக்குள் இணையம் வழியாக விண்ணப்பிக்கலாம். இந்தத் தேர்வுக்கு விண்ணப்பிக்க அதிகபட்ச வயது உச்சவரம்பு 21 ஆகும்.

இந்தத் தேர்வுக்கான பாடத் திட்டம், மாதிரி தாள்கள் மற்றும் தேர்வு தொடர்பான விதிமுறைகள் https://agnipathvayu.cdac.in என்ற இணையதள முகவரி மூலம் தெரிந்து கொள்ளலாம். ஆகவே, திருப்பூர் மாவட்டத்தில் போட்டித் தேர்வுக்கு தயாராகும் மாணவர்கள் மற்றும் இளைஞர்கள் இத்தேர்வில் பங்கேற்று பயனடையலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சேவூரில் ரூ.13 லட்சத்துக்கு நிலக்கடலை ஏலம்

அவிநாசி, ஜன.29: சேவூர் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் திங்கள்கிழமை நடைபெற்ற ஏலத்தில் ரூ.13 லட்சத்துக்கு வர்த்தகம் நடைபெற்றது.

இந்த வாரம் நடைபெற்ற ஏலத்தில் 19,600 கிலோ நிலக்கடலையை கொண்டு வந்திருந்தனர். கிலோவுக்கு முதல் ரக நிலக்கடலை ரூ.80 முதல் ரூ.81 வரையிலும், இரண்டாம் ரக நிலக்கடலை ரூ.73 முதல் ரூ.80 வரையிலும் ஏலம் போனது. மொத்தம் ரூ.13 லட்சத்துக்கு வர்த்தகம் நடைபெற்றது.


மாண்பமை முதன்மை சார்பு நீதிமன்றம், திருப்பூர்
O.S.No.91 / 2023
M/s.The Karur Vysya Bank Ltd,
Rep by its Branch Manager,
Tirupur Main Branch,
No.335, Kumaran Road, Tiruppur - 641601. –Plaintiff
–Vs–
1. Mr.A.Mohammed Faiyaz Ismail, S/o.M.M.Abbas, aged about 27 years.
2. Mr.M.M.Abbas, aged about 53 years, S/o.Mohamed Ismail, Muslim, both are residing at No.17B/123, Chinnan Nagar II Street, Rayapuram, Tiruppur-641601. –Defendants

பொது அறிவிப்பு

மேற்படி எண்ணில், வாதி வங்கியானது பிரதிவாதிகள் மீது கல்வி கடன் தொகையினை வசூல் செய்திட வேண்டி வழக்கு தாக்கல் செய்து மேற்படி நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் இருந்து வருகின்றது. மேற்படி பிரதிவாதிகள் ஆஜராக வேண்டி வரும் 29.02.2024ம் தேதி வாய்தா போடப்பட்டுள்ளது. வரும் 29.02.2024ம் தேதி பிரதிவாதிகள் நேரிலோ (அ) வழக்கறிஞர் மூலமோ மேற்படி நீதிமன்றத்தில் காலை 10.30 மணிக்கு ஆஜராக வேண்டியது. தவறும்பட்சம் பிரதிவாதிகளுக்கு எதிரான உத்தரவு மேற்படி நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்படும் என்பதை அறியவும்.

/உத்தரவுப்படி/
M.Manikandan, B.Com., B.L., Advocate
No.22/34 (1), Police Line 1st Street, Tiruppur - 1.
Mobile : 99949 32389


### அவிநாசிலிங்கேஸ்வரர் கோயில் கும்பாபிஷேகம்

# காவிரி தீர்த்தம் எடுத்து பக்தர்கள் ஊர்வலம்



காவிரி தீர்த்தம் எடுத்து ஊர்வலமாக வந்த பக்தர்கள்.

அவிநாசி, ஜன.29: அவிநாசி கருணாம்பிகையம்மன் உடனமர் அவிநாசிலிங்கேஸ்வரர் கோயில் கும்பாபிஷேக விழாவையொட்டி, பக்தர்கள் காவிரி தீர்த்தம் எடுத்து திங்கள்கிழமை காலை ஊர்வலமாக வந்தனர்.

கொங்கு ஏழு சிவஸ்தலங்களில் முதன்மை பெற்றதாகவும், முதலை விழுங்கிய சிறுவனை சுந்தரர் நாயனார் தேவார பதிகம் பாடி உயிருடன் மீண்டும் உயிர்ப்பித்து எழச் செய்த திருத்தலமாகவும் பிரசித்தி பெற்ற கருணாம்பிகையம்மன் உடனமர் அவிநாசி லிங்கேஸ்வரர் கோயில் விளங்குகிறது.

இக்கோயில் கும்பாபிஷேக விழா கணபதி ஹோமத்துடன் புதன்கிழமை தொடங்கியது. இதைத் தொடர்ந்து நாள்தோறும் சிறப்பு யாக பூஜைகள் நடைபெற்று வருகின்றன. இதன் ஒரு பகுதியாக புதுப்பாளையம், ராயம்பாளையம் சன்னை மிராஸ்தாரர்கள், தைப்பூச பழனி யாத்திரை குழுவினர் மற்றும் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த பொதுமக்கள் காவிரி தீர்த்தக் குடம் எடுத்து ஊர்வலமாக திங்கள்கிழமை காலை கோயிலுக்கு வந்தனர்.

அவிநாசி வீர ஆஞ்சனேயர் கோயிலில் இருந்து குதிரை, காளை மாடு உள்ளிட்டவற்றுடன் வாணவேடிக்கை, கைலாய வாத்தியம் முழங்கவும் புறப்பட்ட தீர்த்தக்குட ஊர்வலம் மேற்கு, வடக்கு,கிழக்குரதவீதிகளின்வழியாக வந்து அவிநாசிலிங்கேஸ்வரர் கோயிலில் நிறைவடைந்தது. இதில் சிறுவர்கள், பெரியவர்கள், சிவனடியார்கள் என ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர். இதையடுத்து கோயிலில் சிறப்பு யாகசாலை பூஜைகள் நடைபெற்றன.

திங்கள்கிழமை மாலை, முதல் கால யாக பூஜை தொடங்கப்பட்டது. இதைத்தொடர்ந்து, வெள்ளிக்கிழமை (பிப்ரவரி 2) வரை எட்டு கால யாக பூஜை நடைபெறுகிறது. முக்கிய நிகழ்வாக வெள்ளிக்கிழமை காலை 9.15 மணி முதல் 10.15 மணிக்குள் மகா கும்பாபிஷேகம் நடைபெறுகிறது. மாலை 6 மணிக்கு சுவாமி திருக் கல்யாணம், இரவு 8 மணிக்கு சுவாமி திருவீதி உலா உள்ளிட்டவை நடைபெறவுள்ளன.

# உள்ளூர் விடுமுறை அறிவிக்க வேண்டும்

### அறங்காவலர் குழுத் தலைவர் ஏ.சக்திவேல்

அவிநாசி, ஜன.29: அவிநாசிலிங்கேஸ்வரர் கோயில் கும்பாபிஷேகம் பிப்ரவரி 2-ஆம் தேதி நடைபெறுவதையொட்டி, மாவட்ட நிர்வாகம் விரைவில் உள்ளூர் விடுமுறை அறிவிக்கும் என எதிர்பார்த்துள்ளோம் என கோயில் அறங்காவலர் குழுத் தலைவர் ஏ.சக்திவேல் தெரிவித்தார்.

அவிநாசிலிங்கேஸ்வரர் கோயில் கும்பாபிஷேக விழாவையொட்டி, முதல் கால யாக பூஜை வெள்ளிக்கிழமை தொடங்கியது. இதில் பங்கேற்ற அவிநாசிலிங்கேஸ்வரர் கோயில் அறங்காவலர் குழுத் தலைவர் ஏ.சக்திவேல் கூறியதாவது:

சென்னை சில்க்ஸ் நிறுவனத்தின் சார்பில் திருமாளிகை பத்தி மண்டபம் தூண்கள் அதன் தன்மை மாறாமல் புதுப்பிக்கப்பட்டுள்ளன.

வளாகத்தில் கல்தளம், அனைத்து கதவுகளும் மராமத்து பணிகளும் முடிவடைந்துள்ளன. மேலும் தோரண வாயில் பிரம்மாண்டமாக தயாராகி வருகிறது.

கொடிமரம் கும்பகோணத்தில் இருந்து கொண்டு வரப்பட்டுள்ளது. குடமுழுக்கு நிறைவுற்றதும், சூரிய ஒளி மின்தகடுகள் கோயில் வளாகத்தில் பொருத்தப்பட உள்ளன. பேரூர் ஆதீனம் சாந்தலிங்க மருதாசல அடிகளார், சிரவை ஆதீனம் குமரகுருபர சுவாமிகள் ஆகியோரின் ஆலோசனைப்படி செயல்பட்டு வருகிறோம்.

கொங்கு நாட்டு மக்கள் பயன்பெறும் வகையில், அவிநாசி மற்றும் திருப்பூர் சுற்றுவட்டார மக்கள் இந்த குடமுழுக்கு நிகழ்வில் பங்கேற்கும் வகையில் உள்ளூர் விடுமுறை கோரி மாவட்ட நிர்வாகம் மற்றும் அமைச்சர்களிடம் கோரிக்கை வைத்துள்ளோம். இது தொடர்பாக உரிய உத்தரவுகள் வழங்கப்படும் என அவர்களும் தெரிவித்துள்ளனர் என்றார்.

அப்போது, கோயில் செயல் அலுவலர் பெரிய மருதுபாண்டியன், சிரவை ஆதீனம் குமரகுருபர சுவாமிகள், அறங்காவலர்கள் பொன்னுசாமி, ஆறுமுகம் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.



யாக சாலை பூஜையில் பங்கேற்ற அறங்காவலர் குழுத் தலைவர் ஏ.சக்திவேல், சிரவை ஆதீனம் குமரகுருபர சுவாமிகள் உள்ளிட்டோர்.

# புள்ளக்காளிபாளையத்தில் நடைபாதை ஆங்கிரமிப்பை அகற்றக் கோரி ஆட்சியரிடம் மனு

திருப்பூர், ஜன.29: காங்கயம் வட்டம், புள்ளக்காளிபாளையத்தில் நடைபாதை ஆக்கிரமிப்பை அகற்றக் கோரி ஆட்சியரிடம் பொதுமக்கள் மனு அளித்தனர்.

திருப்பூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் வாராந்திர மக்கள் குறைதீர் கூட்டம் திங்கள்கிழமை நடைபெற்றது.

இக்கூட்டத்துக்கு மாவட்ட ஆட்சியர் தா.கிறிஸ்துராஜ் தலைமை வகித்தார். இதில், இந்து முன்னணி திருப்பூர் புறநகர் மாவட்டம் அவிநாசி மாவட்டச் செயலாளர் கேசவன் அளித்த மனுவில் கூறியுள்ளதாவது:

கொங்குசிவாலயங்களில்முதன்மையானதும், சுந்தரமூர்த்தி நாயனாரால் பாடப்பெற்றதுமான அவிநாசிலிங்கேஸ்வரர் ஆலயத்தில் வரும் வெள்ளிக்கிழமை (பிப்ரவரி 2) மகா கும்பாபிஷேக விழா நடைபெறுகிறது. இந்த விழாவில் லட்சக்கணக்கான பக்தர்கள் பங்கேற்கவுள்ளனர். ஆகவே, இந்த விழாவுக்கு மாவட்ட நிர்வாகம் உள்ளூர் விடுமுறை அளிக்க வேண்டும். மேலும், சுவாமி திருவீதியுலா நடைபெறவுள்ளதால் கோயிலைச் சுற்றியுள்ள பகுதிகளில் இறைச்சிக் கடை, மதுபானக் கடைகளுக்கு விடுமுறை அளிக்க வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.



திருப்பூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் திங்கள்கிழமை நடைபெற்ற மக்கள் குறைதீர் முகாமில் மாற்றுத் திறனாளிகளுக்கு விலையில்லா மூன்று சக்கர மிதிவண்டிகளை வழங்குகிறார் ஆட்சியர் தா. கிறிஸ்துராஜ். உடன், மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலர் வசந்த ராம்குமார் உள்ளிட்டோர்.

**தீண்டாமை சுவரை அகற்றக் கோரி மனு:** அமமுக அவிநாசி வடக்கு ஒன்றியச் செயலாளர் ஆ.ஜெகநாதன் அளித்த மனுவில் கூறியுள்ளதாவது: சேவூர் தேவேந்திரன் நகர் பகுதி பொதுமக்கள் சார்பில் அப்பகுதியில் உள்ள தீண்டாமை தடுப்புச் சுவரை அகற்றக்கோரி மாவட்ட ஆட்சியரிடம் மனு அளிக்கப்பட்டது. இதன் பேரில் வட்டாட்சியர் உத்தரவிட்டும் வட்டார வளர்ச்சி அலுவலர் தீண்டாமை தடுப்புச் சுவரை அகற்ற எந்த நடவடிக்கையும் எடுக்க மறுக்கிறார். இதுதொடர்பாக பொதுமக்கள் சேர்ந்து கேள்வி கேட்டபோது எனக்கு அதிகாரம் இல்லை என்று பதில் அளிக்கிறார். ஆக்கிரமிப்பை எடுப்பது வட்டார வளர்ச்சி அலுவலர் மற்றும் ஊராட்சியின் பங்கு என்பது அனைவரும் அறிந்ததாகும். ஆகவே, தீண்டாமை தடுப்புச் சுவரை அகற்ற உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

**நடைபாதை ஆக்கிரமிப்பை அகற்றக்கோரி மனு:** காங்கயம் வட்டம், புள்ளக்காளிபாளையத்தைச் சேர்ந்த ஆர்.மகேந்திரன் மற்றும் பொதுமக்கள் சார்பில் அளித்த மனுவில் கூறியுள்ளதாவது: புள்ளக்காளிபாளையம் கிராமத்தில் 10–க்கும் மேற்பட்ட குடும்பத்தினர் நடந்து செல்லும் நடைபாதையை சிலர் ஆக்கிரமிப்பு செய்து இடையூறு ஏற்படுத்தி வருகின்றனர். இந்த நடைபாதையில் கழிவறை, மதில் சுற்றுச்சுவர் மற்றும் தடுப்புகள் அமைத்து ஆக்கிரமித்துள்ளனர். அதே வேளையில் மாற்று வழிப்பாதையில் தேவாலய மதில் சுவரைக் கட்டியுள்ளனர். ஆகவே, நடைபாதை ஆக்கிரமிப்புகளை அகற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

**மக்கள் குறைதீர் முகாமில் 367 மனுக்கள் பெறப்பட்டன:** திருப்பூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில்நடைபெற்றமக்கள்குறைதீர் நாள் கூட்ட முகாமில் பொதுமக்களிடமிருந்து சாலை வசதி, குடிநீர் வசதி, முதியோர் உதவித்தொகை, இலவச வீட்டுமனை பட்டா, புதிய குடும்ப அட்டை உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் தொடர்பாக 367 மனுக்கள் பெறப்பட்டன. இந்த மனுக்கள் மீது மனுதாரர்கள் முன்னிலையிலேயே விசாரணை செய்து உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களை மாவட்ட ஆட்சியர் தா.கிறிஸ்துராஜ் அறிவுறுத்தினார்.

இதைத்தொடர்ந்து, மாற்றுத் திறனாளிகள் நலத் துறை சார்பில் தலா ரூ.9,050 மதிப்பீட்டில் 5 பயனாளிகளுக்கு ரூ.45,250 மதிப்பிலான மூன்று சக்கர மிதிவண்டிகளையும் வழங்கினார். மேலும், மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் 35–ஆவது சாலைப் பாதுகாப்பு மாத விழாவை முன்னிட்டு திருப்பூர் மாநகர போக்குவரத்து, மாநகர காவல் துறையின் சார்பில் நடைபெற்ற சாலைப் பாதுகாப்பு மற்றும் போக்குவரத்து விழிப்புணர்வு நாடகத்தை பார்வையிட்டார்.

இந்த முகாமில், மாவட்ட வருவாய் அலுவலர் த.ப.ஜெய்பீம், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (நிலம்) மலர், மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர் புஷ்பாதேவி, மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் ஆர்.குமாரராஜா, மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலர் வசந்த ராம்குமார் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.


**அசல் நிலம் / சொத்து ஆவணம் காணவில்லை**

திருப்பூர் மாவட்டம், பல்லடம் வட்டம், கணபதிபாளையம் கிராமம், ஜோதி நகர், கதவு எண். 2/145 என்ற முகவரியில் வசித்து வரும் ராயப்பகவுண்டர் மகன் ஆதார் அட்டை எண். 8343 9966 0481 சுமார் 61 வயதுடைய தங்கவேல் ஆகிய நான் இதன் மூலம் பொது மக்களுக்கு தெரிவித்துக்கொள்வது யாதெனில் பல்லடம் சார்பதிவாளர் அலுவலகத்தில் கடந்த 18-11-1986-ஆம் தேதியன்று பதிவு செய்யப்பட்ட எனது தந்தைக்கு சொந்தமான அசையா சொத்தின் ஆவணம் எண் 122/1987 கடந்த 20-01-2024-ஆம் தேதியன்று சுமார் காலை 11.00 மணியளவில் பல்லடம், ராயர்பாளையம் பேருந்து நிறுத்தத்திற்கு அருகில் தொலைந்து விட்டது. யாரேனும் அதனை கண்டுபிடித்தால் எனது 9843090367 கைபேசி எண்ணிற்கு அல்லது மேற்கண்ட எனது முகவரிக்கு தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.


# உப்பாறு அணைக்கு தண்ணீர் வழங்குவது தொடர்பாக பேச்சுவார்த்தை

தாராபுரம், ஜன.29: உப்பாறு அணைக்கு தண்ணீர் வழங்குவது தொடர்பாகதாராபுரம்கோட்டாட்சியர் அலுவலகத்தில்திங்கள்கிழமை பேச்சுவார்த்தை நடைபெற்றது.

திருப்பூர் மாவட்டம், தாராபுரம் அருகே உள்ள உப்பாறு அணைக்கு திருமூர்த்தி அணையில் இருந்து பிஏபி பாசனத் திட்டத்தில் உபரிநீரை திறந்துவிட வலியுறுத்தி, கடந்த 4 நாள்களாக பாசன விவசாயிகள் பல்வேறு போராட்டங்களில் ஈடுபட்டு வந்தனர்.

உப்பாறு அணையின் முழுக் கொள்ளளவுக்கு தண்ணீர் திறந்து விட வேண்டும் என உப்பாறு பாசன விவசாயிகள் கோரிக்கை விடுத்திருந்தனர். இதைத் தொடர்ந்து, உப்பாறு அணைக்கு தண்ணீர் வழங்குவது தொடர்பாக தாராபுரம் கோட்டாட்சியர் அலுவலகத்தில் திங்கள்கிழமை பேச்சுவார்த்தை நடைபெற்றது.





உப்பாறு அணைக்கு தண்ணீர் வழங்குவது தொடர்பாக தாராபுரம் கோட்டாட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற பேச்சுவார்த்தையில் பங்கேற்ற கோட்டாட்சியர் செந்தில் அரசன் உள்ளிட்டோர்.

தாராபுரம் வருவாய் கோட்டாட்சியர் செந்தில் அரசன் தலைமையில், தாராபுரம் டிஸ்பி கலையரசன் மற்றும் வருவாய்த் துறையினர் முன்னிலையில் பாசன விவசாயிகளுடன் பேச்சுவார்த்தை நடைபெற்றது.

இதில், திருமூர்த்தி அணையில் பரம்பிக்குளம்–ஆழியாறு பாசனப் பகுதிகளுக்கு வழங்கியதுபோக ஒரு டிஎம்சி தண்ணீர் உபரிநீராக இருப்பதால், இதில் அரை டிஎம்சி தண்ணீரை உப்பாறு அணைக்கு வழங்கலாம். ஆனால், தண்ணீர் திறந்துவிடுவது குறித்து மாவட்ட ஆட்சியர்தான் முடிவெடுக்க வேண்டும். எனவே, மாவட்ட ஆட்சியரிடம் கலந்து பேசி தண்ணீர் திறந்து விடுவது குறித்து முடிவு அறிவிக்கப்படும் என அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்தக் கூட்டத்தில், பொள்ளாச்சி அமராவதி அணையின் உதவிப் பொறியாளர் காஞ்சித்துரை, உடுமலைப்பேட்டை திருமூர்த்தி அணையின் உதவிப் பொறியாளர் மகேந்திரன் மற்றும் உப்பாறு பாசன விவசாயிகள், வருவாய்த் துறையினர் கலந்து கொண்டனர்.

## தனியார் தொலைக்காட்சி செய்தியாளர் மீது தாக்குதல்: மேலும் 3 பேர் கைது

பல்லடம் ஜன.29: பல்லடம் தனியார் தொலைக்காட்சி செய்தியாளரை அரிவாளால் வெட்டிய வழக்கில் மேலும் 3 பேரை போலீஸார் திங்கள்கிழமை கைது செய்தனர்.

பல்லடத்தில் தனியார் தொலைக்காட்சி செய்தியாளர் நேசபிரபுவை ஒரு கும்பல் புதன்கிழமை அரிவாளால் வெட்டியது. இதில் படுகாயமடைந்த அவர் கோவையில் உள்ள தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

இந்த சம்பவம் தொடர்பாக காமநாயக்கன்பாளையம் போலீஸார் விசாரணை நடத்தி வருகின்றனர். இதில் செய்தியாளரை அரிவாளால் வெட்டிய திருப்பூரைச் சேர்ந்த சரவணன் (23), ஈரோட்டைச் சேர்ந்த பிரவீன் (27) ஆகியோரை காமநாயக்கன்பாளையம் போலீஸார் சனிக்கிழமை கைது செய்தனர். இந்த நிலையில், இவ்வழக்கில் தொடர்புடைய பல்லடம் சுற்றுவட்டாரப் பகுதியைச் சேர்ந்த பாலபாரதி (28), ஹரிஹரன் (25), ஜெயபிரவீன் (23) ஆகியோரை போலீஸார் திங்கள்கிழமை கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.


**SBI**

ஒடுக்கப்பட்ட சொத்து வசூல் கிளை
எண்.8, டாக்டர். அம்பேத்கர் ரோடு
விநாயக நகர் கிளை, முதல் தளம்
மதுரை–625 020.
போன் : 0452 - 2531821

அதிகாரம் பெற்ற அலுவலர்
திரு. அபினவ் போத்ரா
மொபைல் : 9310850535/ 9843643966
மின்னஞ்சல் : sbi.13165@sbi.co.in

**அசையாச் சொத்துக்களின் விற்பனைக்கான, விற்பனை அறிவிப்பு**

கடனீட்டு சொத்துக்கள் ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை மறு சீரமைத்தல் கடனீட்டு சொத்துக்கள் மீதான உரிமை அமலாக்க சட்டம், 2002, பிணையநலன் (அமலாக்கம்) விதிகள் 2002 ன் விதி 8(6) ன் கீழ், அசையாச் சொத்துக்களின் விற்பனைக்கான மின்–ஏல விற்பனை அறிவிப்பு.

பாரத ஸ்டேட் பாங்குவின் (பாதுகாக்கப்பட்ட கடனீந்தவர்) அதிகாரம் பெற்ற அலுவலர் அவர்கள், மேற்படி வங்கியின் மதுரை ஒடுக்கப்பட்ட சொத்து வசூல் கிளைக்கு வரவேண்டிய கீழே சம்பந்தப்பட்ட கணக்கில் குறிப்பிடப்பட்டுள்ள தொகை மற்றும் பின்வட்டி, பிற செலவுகளை கீழ்க் குறிப்பிட்டுள்ள கடன்தாரர்/கள் மற்றும் உத்தரவாதமளித்தவர்/களிடமிருந்து வசூலிக்கும் பொருட்டு, கடன் வழங்கிய வங்கிக்குப் பிணையப்படுத்தப்பட்ட ஆக்கபூர்வ (constructive) சுவாதீனம் செய்து கொண்ட கீழ்க்கண்ட அசையாச் சொத்துக்களை 22.02.2024 அன்று விற்பனை செய்யவுள்ளார் என்பதை குறிப்பாக கடன்தாரர்(கள்) மற்றும் உத்தரவாதமளித்தவர்(கள்) மற்றும் பொதுமக்களுக்கு இந்த அறிவிப்பின் மூலம் தெரியப்படுத்தப்படுகிறது. இந்த சொத்துக்கள் 'எங்கு உள்ளதோ அதே நிலையில்' 'என்ன உள்ளதோ அதன்படி' மற்றும் 'எப்படி உள்ளதோ அதே நிலையில்' விற்கப்படும்.

கடன்தாரர் பெயர் மற்றும் முகவரி: திரு.ஈஸ்வரமூர்த்தி.P, த/பெ.பரமசிவன், எண்.239, காமராஜபுரம், திருப்பூர் ரோடு, தாராபுரம் – 638656. மேலும்: வேலம்மாள் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி, வேலம்மாள் அவென்யூ, கரூர் – மதுரை தேசிய நெடுஞ்சாலை–7, காக்காவாடி அஞ்சல், கரூர் – 639003. திரு.ரவிச்சந்திரன்.P, த/பெ.பரமசிவன், PC.3346, TSP 14th BN, பழனி, திண்டுக்கல். மேலும்: எண்.239, காமராஜபுரம், திருப்பூர் ரோடு, தாராபுரம் – 638656.
29.01.2024 வரை நிலுவைத் தொகை: ரூ.34,45,449/– (ரூபாய் முப்பத்து நான்கு லட்சத்து நாற்பத்து ஐந்தாயிரத்து நானூற்று நாற்பத்து ஒன்பது மட்டும்) மற்றும் பின் வட்டி மற்றும் பிற செலவுகள்.

அசையாச் சொத்துக்கள் விபரம்: சொத்து ID : SBIN86756396627, திருப்பூர் பதிவு மாவட்டம், தாராபுரம் சார் பதிவு மாவட்டம், தாராபுரம் தாலுகா, தாராபுரம் நகராட்சி வருவாய் வார்டு எண்.4, பிளாக் எண்.13, நகராட்சி தேர்தல் வார்டு எண்.1, காமராஜபுரம் குறுக்கு வீதி–2, பழைய கதவு எண்.58, கதவு எண்.119/E, டவுன் சர்வே எண்.48 (பழைய டவுன் சர்வே எண்.48/5/14), இதிலமைந்த 0.0125.0 ஹெக்டேர் புஞ்சை, இதில் 1345 சதுரடி நிலம். (விற்பனைப் பத்திர எண்.673/2017, தேதி : 16.02.2017) சொத்தின் எல்லைகள்: வடக்கே – கிழமேல் வழித்தடம், தெற்கே – டவுன் சர்வே எண்.53, கிழக்கே – டவுன் சர்வே எண்.49, மேற்கே – டவுன் சர்வே எண்.47. அளவுகள்: கிழமேல் 27 ¼ அடி (8.3 மீட்டர்) வடபுறம், கிழமேல் 27 ½ அடி (8.4 மீட்டர்) தென்புறம், தென்வடல் 41 ½ அடி (12.6 மீட்டர்) கிழபுறம், தென்வடல் 41 ½ அடி (12.6 மீட்டர்) மேற்புறம். ஓட்டுக்கூரையிட்ட 700 சதுரடி கட்டிடத்துடன், அதன் அறைகள் மற்றும் அங்குள்ள காலியிடங்களில் உரிமையுடன், மின்னிணைப்பு எண்.361–016–8, குளியலறை, கழிப்பறை, சொத்தினைச் சுற்றியமைந்த சுவர்களில் உரிமை, வடபுறம் அமைந்த கிழமேல் வழித்தடத்தில் உரிமை மற்றும் வழக்கமான வழித்தடம் மற்றும் பாத்திய உரிமைகள் மற்றும் ஆவணத்தில் உள்ளபடியான அங்குள்ள பிற உரிமைகளுடன்.
அட்சரேகை / தீர்க்கரேகை ஒருங்கிணைப்புகள் : 10.753172°N / 77.520409°E

நிர்ணயிக்கப்பட்ட விலை : ரூ.39,00,000/- முன்வைப்புத் தொகை : ரூ.3,90,000/- ஏல உயர்வு மடங்கு : ரூ.50,000/-

மின்–ஏல விற்பனை விபரம் :

மின்–ஏலத் தேதி மற்றும் நேரம் : 22.02.2024 (வியாழன்) காலை 11.00 மணியிலிருந்து மதியம் 2.00 மணி வரை. (ஏலம் தொடரும்பட்சத்தில் அது நிறைவு பெறும் வரைக்குமான 10 நிமிட அளவற்ற நீட்டிப்புகளுடன்)

EMD க்கான சான்று சமர்ப்பிப்பதற்கான கடைசித் தேதி மற்றும் நேரம்: விருப்பமுள்ள ஏலதாரர்கள் மின்–ஏலம் மூடுவதற்கு முன்பாக, முன் ஏல முன்வைப்புத் தொகையை MSTC யில் செலுத்தலாம்.

சொத்தினைப் பார்வையிடும் நாள் : 13.02.2024 (செவ்வாய்), காலை 11.00 மணி முதல் மதியம் 1.00 மணி வரை

முன்வைப்புத் தொகை (EMD) NEFT மூலமாக MSTC E-WALLET –ல் வரவு வைக்கப்பட வேண்டும். (இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ள நிபந்தனை விபரங்களில் எண்.13-b ஐ பார்க்கவும்).

இந்த ஏலமானது https://www.mstcecommerce.com/auctionhome/ibapi/index.jsp. இணையதளம் மூலமாக ஆன்லைனில் மட்டுமே நடத்தப்பெறும். இதன் செயல்முறைகளுக்கு குறைந்தது இரண்டு முதல் மூன்று வேலை நாட்கள் எடுத்துக் கொள்ளப்படுவதால், ஏலதாரரின் பதிவு மின்–ஏலத் தேதிக்கு மிக முன்னதாகவே ஏலதாரரால் செய்து முடித்துக் கொண்டிருக்கப்பட வேண்டும். மின்–ஏல விற்பனை குறித்த விரிவான நிபந்தனை விபரங்களுக்கு, மின்–ஏலத்தின் போர்டலில் பதிவு செய்து கொள்வதைத் தொடர்வதற்கு மற்றும் ஆன்லைன் மின்–ஏல விண்ணப்பப் படிவங்கள், உறுதிமொழி முதலியவை அடங்கிய மின்–ஏல டெண்டர் ஆவணத்திற்கு, கீழ்க்கண்ட இணையதளங்களில் உள்ள 'லிங்க்'கினைப் பார்வையிடலாம். https://ibapi.in & https://bank.sbi

தேதி : 29.01.2024
இடம் : மதுரை

அதிகாரம் பெற்ற அலுவலர்
பாரத ஸ்டேட் பாங்கு



**OMKARA ASSETS RECONSTRUCTION Pvt. Ltd.**

ஓம்காரா அஸட் ரீகன்ஸ்ட்ரக்ஷன் பிரைவேட் லிமிடெட்
CIN : U67100TZ2014PTC020363
பெருநிறுவன அலுவலகம் : கோஹினூர் ஸ்கோயர், 47வது தளம், N.C. கெல்கர் மார்க், R.G. கட்காரி சௌக், டாடர் (மேற்கு), மும்பை - 400070. தொ.பே. : +91 75583 92736

(பிற்சேர்க்கை - IV-A) (பார்க்க - விதி 8(6)க்கான விதி விலக்கு) அசையா சொத்து விற்பனை செய்யப்படுவதற்கான மின்னணு ஏல விற்பனை அறிவிப்பு

பிணைக்காப்பு நிதிச்சொத்து மறுசீரமைப்பு மற்றும் பிணைக்காப்பு செயலாக்க சட்டம் 2002 ("சர்ஃபாசி சட்டம்") மற்றும் பிணைச்சொத்து பாதுகாப்பு (அமலாக்கம்) விதிகள் 2002 ன் விதி 8(6) க்கான விதி விலக்கு - ன் கீழ் அசையா சொத்துக்கள் விற்பனைக்கான மின்னணு ஏல விற்பனை அறிவிப்பு

இதன் மூலம் பொது மக்களுக்கும் குறிப்பாக கடன்தாரர்(கள்) மற்றும் ஜாமீன்தாரர்(களுக்கும்) அறிவிக்கப்படுவது யாதெனில், இதன் கீழ் விவரிக்கப்பட்ட ஜாமீன் பெற்று கடனளித்தவருக்கு அடமானம் / கடன் பொறுப்பு ஏற்படுத்தப்பட்ட அசையா சொத்து, ஸ்டேட் பேங்க் ஆஃப் இந்தியா (SBI) ன் அதிகாரப்பூர்வ அலுவலரால் 07.01.2017 அன்று சுவாதீனம் எடுக்கப்பட்டுள்ளது. மேலும், ஓம்காரா PS 25/2019-20 டிரஸ்ட் - ன் அறங்காவலர் என்ற தகுதியில் செயல்படும் ஓம்காரா அஸட் ரீகன்ஸ்ட்ரக்ஷன் பிரைவேட் லிமிடெட் (OARPL) ஆனது, 30.03.2020 தேதிய பணி ஒப்படைவு ஒப்பந்தத்தின் கீழ் SBI (பணி ஒப்படைப்பவர்) யிடமிருந்து இதன் கீழ்க்கண்ட ஜாமீன் சொத்துக்களுடன் சேர்த்து இதன் கீழ்க்கண்ட கணக்குகளில் உள்ள மொத்த நிலுவைத்தொகைகளையும் அடைந்துள்ளது. அதனால், OARPL ஆனது பணி ஒப்படைப்பவரின் நிலையினை பெற்று, நிலுவைத்தொகைகளை வசூலிக்கவும், பிணைக்காப்பு அமலாக்கம் செய்யவும் அதிகாரம் பெற்றுள்ளது. OARPL ன் அதிகாரப்பூர்வ அலுவலர் நிலுவைத்தொகைகளை வசூலிப்பதற்காக, இதன் கீழ்க்குறிப்பிட்ட ஜாமீன் சொத்துக்களை விற்பனை செய்ய இதன் மூலம் உத்தேசித்துள்ளார். அதனால் ஜாமீன் சொத்துக்களை வாங்குவதற்கான விலைப்புள்ளிகள் / விலைகோரல்களை மூடி முத்திரையிட்ட உறையிலிட்டு வரவேற்கப்படுகின்றன. இதன் கீழ்க்கண்ட அந்தந்த களத்தில் காண்பிக்கப்பட்டுள்ள ஜாமீன் பெற்று கடனளித்த OARPL க்கு அந்தந்த கடன்தாரர் மற்றும் கூட்டு கடன்தாரர்(களிடமிருந்து) நிலுவையாக உள்ள தொகைகளை வசூலிப்பதற்காக, இதில் குறிப்பிடப்பட்டுள்ள அடையாள சுவாதீனத்திலுள்ள சொத்துக்கள் சர்ஃபாசி சட்டம் 13(2) மற்றும் (4) ன் கீழான ஏற்பாடுகளின் கீழான அதிகாரத்தையும், உரிமைகளையும் செயலுறுத்தி "இருக்கின்ற இடத்தில்" "இருக்கின்ற நிலையில்" மற்றும் "இருக்கின்றவற்றுடன்" என்ற அடிப்படையில் விற்பனை செய்யப்படும். கடன்தாரர்(கள்) / ஜாமீன்தாரர்கள் / அடமானதாரர்கள், நிலுவைத்தொகைகளை, பிரிவு 13(2) ன் கீழ் கோரிக்கை அறிவிப்பு அனுப்பிய தேதி, அடிப்படை விலை, விலைப்புள்ளி அதிகரிப்பு தொகை, டேவணித்தொகை, ஆய்வு தேதி மற்றும் நேரம் ஆகியன இதன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளன.

| கடன்தாரர்(கள்) / ஜாமீன்தாரர்கள் / அடமானதாரர்கள் பெயர் | ஜாமீன் சொத்து விபரங்களாவன | சொத்தின் உரிமையாளர் | கோரிக்கை அறிவிப்பு தேதி மற்றும் கோரப்பட்ட தொகை | அடிப்படை விலை | விலைப்புள்ளி அதிகரிப்பு தொகை | டேவணித் தொகை |
|---|---|---|---|---|---|---|
| திருப்பூர் சூர்யா ஹைடெக் அப்பேரல் பிரைவேட் லிமிடெட் (கலைப்பநுவலிலுள்ளது) கடன்தாரர், திரு. K. குப்புசாமி, திருமதி. K. ராதாம்பிகை, திரு. K. கார்த்திக், திரு. S. ஹரிஹரசிவசுப்ரமணியன், திருமதி. K. சூர்யா, திருமதி.K.பழனாத்தாள் (ஜாமீன்தாரர்கள்) | தமிழ்நாடு, திருப்பூர் மாவட்டம் & தாலுக்கா, தொட்டிபாளையம் கிராமம், சர்வே எண். 663, TS எண். 1163/28/2, ப்ளாக் எண். 8, சூர்யா நகர், லட்சுமி நகருக்கு கிழக்கு, பிள்ளையார் கோவில் தோட்ட வீடுகளில் அமையப்பெற்ற 0.86 சென்ட் பரப்பளவுடன் 24024 சதுர அடி கட்டிடம் ஆகியவற்றுடனான தொழிற்சாலை இடம் மற்றும் கட்டிடம் ஆகியன. அட்ச ரேகை : 11.116283, தீர்க்க ரேகை : 77.344464 (அடையாள சுவாதீனத்திலுள்ளது) | திரு. K குப்புசாமி | தேதி : 20.09.2016 தொகை : 31.01.2016 ம் தேதியின் படி, ரூ. 118,09,31,035/- (ரூபாய் நூற்று பதினெட்டு கோடியே ஒன்பது இலட்சத்து முப்பத்து ஓராயிரத்து முப்பத்து ஐந்து மட்டும்) வட்டி மற்றும் வட்டி மற்றும் இதர கட்டணங்கள் உட்பட | ரூ. 4,97,00,000/- | ரூ. 5,00,000/- | ரூ. 49,70,000/- |

கணக்கு எண் : 50516612869, பயனாளி பெயர் : Omkara PS 25/2019-20 Trust, வங்கி பெயர் - இந்தியன் வங்கி, கிளை - BKC, மும்பை, IFSC Code : IDIB000B845
மின்னணு ஏல தேதி & நேரம் : 04.03.2024 (திங்கட்கிழமை) காலை 11.00 மணி முதல் நண்பகல் 12.00 மணி வரை
விலைப்புள்ளிகள், பங்கேற்பு கடிதம் / KYC ஆவணங்கள் / டேவணித்தொகைக்கான சான்று ஆகியவற்றை சமர்ப்பிப்பதற்கான கடைசி தேதி மற்றும் நேரம் : 02.03.2024 (சனிக்கிழமை) மாலை 06.00 மணி வரை.

ஏலத்துக்கான விதிகள் மற்றும் நிபந்தனைகள் : விற்பனைக்கான விரிவான விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு வலைதளம் http://omkaraarc.com/auction.php ல் கொடுக்கப்பட்டுள்ள தொடர்பை தயவு கூர்ந்து பார்வையிடவும்.
ஏலமானது OARPL மூலம் ஆன்லைனில் நடத்தப்படும். DD/பே ஆர்டர் (அசல்) அல்லது NEFT/RTGS மூலம் செலுத்தப்பட்ட டேவணித்தொகையுடன் கூடிய விலைப்புள்ளிகளை (ஆன்லைன் மற்றும் காகித வடிவம்) சமர்ப்பிப்பதற்கான கடைசி தேதி - 03.02.2024 மாலை 06.00 மணி. டேவணித்தொகை செலுத்திய விருப்பமுள்ள ஏலதாரர்கள் உள்நுழை அடையாளம் & கடவுச்சொல் ஆகியவற்றை உருவாக்குவதிலும், தரவுகளை பதிவேற்றம் செய்வதிலும், விலைப்புள்ளி சமர்ப்பித்தலிலும், மின்னணு ஏல விலைகோரல் முறைக்கான பயிற்சிக்கும் மின்னணு ஏல சேவைதாரர் "M/s. C1 India Pvt. Ltd" யை உதவிக்கான தொலைபேசி எண் : +91-7291981124/25/26, உதவிக்கான மின்னஞ்சல் முகவரி : support@bankeauctions.com மற்றும் சொத்து தொடர்பான விசாரணைகளுக்கு அதிகாரப்பூர்வ அலுவலர், திரு ஷூபோதாப் பானர்ஜி, அலைபேசி எண் : +91 7558392736, மின்னஞ்சல் முகவரி : s.banerjee@omkaraarc.com ல் அனைத்து வேலை நாட்களிலும் வேலை நேரத்தில் தொடர்பு கொள்ளவும். விருப்பமுள்ள ஏலதாரர்கள் திவால் மற்றும் நொடிப்புநிலை சட்டம் 2016 ன் பிரிவு 29A ன் கீழான அறிவிக்கையை சமர்ப்பித்து அதற்கு கட்டுப்பட வேண்டும்.

பிணைக்காப்பு (அமலாக்கம்) விதிகள் 2002 ன் விதி 8(6) ன் கீழ் விற்பனைக்கான சட்டபூர்வ அறிவிப்பு

இவ்வறிவிப்பானது, மேற்சொன்ன கடன் கணக்குக்கான கடன்தாரர்(களுக்கு) பிணைக்காப்பு, நிதிச்சொத்து மறுசீரமைப்பு, பிணைச்சொத்து பாதுகாப்பு (அமலாக்கம்) சட்டம் 2002 ன் கீழான ஏற்பாடுகள் மற்றும் பிணைக்காப்பு (அமலாக்கம்) விதிகள் 2002 ன் விதி 8(6) ன் கீழ், மின்னணு ஏலம் மூலம் மேற்குறிப்பிட்ட தேதி மற்றும் நேரத்திற்குள் அவரவர்களால் விருப்பப்படும் பட்சத்தில், இதன் மேற்குறிப்பிட்ட நிலுவைத்தொகையை செலவுகள் மற்றும் கட்டணங்களுடன் திருப்பி செலுத்தி, சொத்துக்களை மீட்டுக்கொள்ளும் அறிவுறுத்தலுடன் (அவ்வாறு திருப்பி செலுத்த தவறும் பட்சத்தில்) நடத்தப்படும் ஏலம் / விற்பனை மூலம், அதிகாரப்பூர்வ அலுவலர் / ஜாமீன் பெற்று கடனளித்தவரின் அதிகார வரம்பில் பிணைக்காப்பு (அமலாக்கம்) விதிகள் 2002 ன் விதி 8(5) ல் பரிந்துரைக்கப்பட்ட ஏதேனும் முறையில் சொத்து விற்பனை செய்யப்படும் என்பதை தெரிவித்து வழங்கப்படும் (30) முப்பது நாட்களுக்கு குறைவிலாது வழங்கப்பட வேண்டிய கட்டாய அறிவிப்பாகும்.

ஒம்/-
தேதி : 30.01.2024
இடம் : மும்பை

அதிகாரப்பூர்வ அலுவலர், ஓம்காரா அஸட் ரீகன்ஸ்ட்ரக்ஷன் பிரைவேட் லிமிடெட்
(ஓம்காரா PS 25/2019-20 டிரஸ்ட் - ன் அறங்காவலர் என்ற தகுதியில் செயல்படும்)